9696

உ

சிவசண்முக துணை

காயாமொழி ஆதித்தன்

# திருமுக விலாசம்.

ஆக்கியோன்

பெருநாழி வெ. ஆ. குமரய்ய நாடன்

அணா 4 1937.

உ

சிவசண்முகன் துணை.

## காயாமொழி ஆதித்தன்

# திருமுக விலாசம்.

ஆக்கியோன்

பெருநாழி வெ. ஆ. குமரய்ய நாடன்

மாகலீன் அச்சுக்கூடம், செங்கல்பட்டு.

விலை அணா 4 1937.

# முகவுரை.

விரிந்த வுலகின்கண் எண்ணற்கரிய கால வட்டங்களாக வசித்துவந்துள மாந்தர் தொகுதி எண்ணற்கரியவே இவற்றில் மணியினத்தில் ஒளியிற் சிறந்தவைகளையெடுத்து நூற்களிற் கோர்த்துவைப்பார் போன்று, வீரம், கொடை, கல்வி, பக்தி, தெய்வ கைங்கிரியத்தொண்டு, பரோபகாரம் ஆகிய ஒளிகளோறப்பெற்று விளங்கிய மூனுமக்களை, அறிவிற் சிறந்த கவிஞர்கள் தாம் தாம் இயற்றிய நூற்களில் எடுத்துச்சொல்லி, அணிபெற வைத்திருக்கின்றனர். இவ்விதம் கூறப்பட்டிருப்பவர்கள் பூதவுடம்பழிந்தும் புகழுடம்பழியாது இன்றும் நாம் எடுத்துக்கூறும்படியான நிலையிலிருந்து வருகின்றனர். "தோன்றிற் புகழோடு தோன்றுக, அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று" என்னும் திருவாக்கியத்திற் கிலக்ககாகவும், நிற்பவ ரிவர்களே. இத்தகையோர் குணானுபவங்களை விவரிக்கப் புகுந்த வித்துவான்கள் நூலெழுதும் விதிக் கியைய அறம், பொருளின்பம் வீடு என்பனவாகிய புருஷார்த்தங்களும், மற்றுள பொருள்களும் அமைவுறச் செய்திருப்பதால், படிக்கு மக்கள் பயன்பெறுவதாகின்றது. முன் சொல்லியபடியான பலதிறப்பட்ட பக்களில் திருமுக விலாசம் என்னும் பிரபந்தமும் ஒன்றாகும். ஓர் கவிஞன், ஓர் தெய்வம் தரப்பெறுவதாகிய உத்தரவைப்பெற்றுக் குறிப்பிடப் பட்ட தெய்வத் தலைவனிடமாகச் சென்று பரிசு பெறுவதென்பது வரலாறு.

இந்நூலுக்குரியர் ஆதித்த நாடர். இவர் குடும்பம் தெக்ஷண பாண்டியில், விஸ்தீரண காணி நிலங்களேற்பட்டு ஓர் சிற்றரசு ஆட்சியாய் ஏக நிலையிலிருந்து பின்பு பல பங்குவாரீசு விகிதங்களில் பிரிக்கப்பட்டுத் தற்கால சந்ததியார்கள் அநுபவஞ் செய்துகொண்டு வருகின்றனர்.

சிவ சண்முகப்பெருமான் திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கப்பெற்ற திருச்செந்தூர், சொர்ண நிலையாலயம் பூர்வீக புராண சம்பந்தமுடையது: நற்கீரர் முதலிய சங்க வித்வான்களால்

பாடப்பெற்றது. கி. பி. 810—835 வரை ஆண்ட வரகுண பாண்டியன் காலத்தில் வரையப்பெற்ற கல்வெட்டு ஸாஸனம் மேற்படி பாண்டியன் அப்பக்கமான நாட்டுச் சிற்றரசர்களிடம் பெற்றுள்ள 1400 காசுகளைக் கொற்கை முதலான நகரசபைகளிடம் கொடுத்து வட்டியாகக் குறிக்கப்படும் நெல்லைக்கொண்டு நான்குவேளைப் பூசைகள் நடந்துவரும்படிச் செய்ததாகக் கண்டிருக்கிறது. மாறோகமென்று சங்க நூற்களிற் சொல்லப்பட்டிருக்கின்ற கொற்கையைச் சூழ்ந்த நாடுகளில் கொற்கைக்குத் தென்பாலாகிய நாடுகளுக்கு (மாறனாடு) மானாடு (குடநாடு) அல்லது குட்டநாடு என்று பெயர். இவைகளில் மானவீரவளநாடு குட்டநாடு என்னும் இரண்டு நாடுகள் சம்பந்தமான பிரதேசத்திலேயே திருச்செந்தூரென்னும் திவ்விய தலமிருந்து வருகின்றது. இவ்விரண்டு நாடுகளின் ஆட்சி பாண்டியர்கள் அல்லது பாண்டியர்களை ஜெயித்து ஆண்ட சோழர்களுடையதாகவுமிருந்து வந்து, நாடார்களுடைய காணி நிலங்களாகவேயிருந்து வருகின்றது. திருச்செந்தூர் ஆலய ஸாஸன ஷரத்துக்கள்—குடநாடு, குட்டநாடு, திருச்செந்தூர்—திரிபுவன மகாதேவி—சதுர்வேத மங்கலம்—நாயனாரிளையநயினார்கோயில்—சொர்ண நிலையம் என்பதே.

திருச்செந்தூர் அறுமுகப்பெருமான் ஆலயத்தில் ஆதித்த நாடார்களால் தெய்வ கைங்கிரிய ஸாஸனங்கள் 1584, 1675—1843 ஆகிய காலங்களில் ஏற்பட்டுப்பல ஊழியங்கள் நிகழப்பெற்று அவர்கள் கோவிலுரிமையாளராகவேயிருந்து வருகின்றனர்.

ஆதித்த நாடார்களுடைய மரபுகால வர்த்தமானங்கள் ஆலய காரியங்கள் ஆகியவற்றைப் பாளையங்கோட்டை ஜெயின்ட் ஜான்ஸ் காலேஜ் தலைமைத் தமிழாசிரியர் பண்டித தா. மாசில்லாமணி நாடார் அவர்கள் 1931ல் அச்சிட்ட பாண்டிய தேச ஆதித்த வம்ச சரித்திரத்தில் விவரமாய்க்காணலாம். நான் இச்சரித்திரத்தையே ஆதாரமாகக்கொண்டு இந்நூல் செய்திருக்கின்றேன். ஆதித்தர்கள் மரபு செந்திலம்பதியாலயத்திற் செய்து வந்துள்ள திருப்பணியறங்கள், கட்டபொம்மனிடம் போராடிச் ஜெயித்த மறப்புயதிறங்கள், இதனிற் காணலாம். சுமார் 400 வருட காலங்களாய் நடந்துள்ள தெய்வத்திருப்பணிகள் மற்றுள்ள செயல்கள் பல ஆதித்தர்களால் நிகழ்ந்திருப்பினும் ஏககாலத்தில் ஒருவர் செய்ததாகவே

சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விதஞ்சொல்வது நூன்மரபு. தற்கால ஆதித்த நாடார்கள் கல்வி உத்தியோகச் செயல்களையும் குறிப்பிட்டிருக்கின்றது. ஊர்ப்பெயர் காயம்பொழில், காயாமொழி என்பனவாக வழங்கப்படுவதாயினும் "பாருக்குள் ஏற்றமாம், காயாங்குளத்தார்" "குட்டத்து நாட்டார் காயாங் குளத்தார்" என்பதாகக் குற்றாலக் குறவஞ்சி நூலாசிரியர் கூறியிருப்பதைப் பார்க்க, காயாமொழி ஊரையடுத்துத் தென் கீழ்த்திசையிலிருந்துவரும்,குளத்தின் பேரால் காயாங்குள மென்ற பேர் ஏற்பட்டதாய்த் தெரிகின்றது மருதூர் என்ற பெயரும் உண்டு. பாண்டிநாடு' சைப்பற்றி ஆண்ட சான்றோன் சூரியகுலச் சோழவரசர்கள் பரம்பரையில் வந்த ஆதிசிவந்தி ஆதித்தநாடன் மரபினராய்த் தெற்கு வீட்டுப்பண்ணை, வடக்கு வீட்டுப்பண்ணை—இவற்றின் கீழவாசல், மேலவாசல் என்பனவாகிய பாகுபாடுகளாகப் பிரிக்கப்பட்டு நற்குடிகளாக இருந்து வருகின்ற சபை சென்று பாடிப்படித்துப் பரிசு பெற்றேன்.

தற்கால ஆதித்தர்களில் முதிர்ந்த வயதுடையவரும் மேற்சொல்லிய தமிழ்ப்பண்டிதர் கூறுதலற்றை விவரணப்படுத்திக் கூறியவர்களில் ஒருவருமான ஸ்ரீமாந் சுந்தரக்குமாரு ஆதித்த நாடாரவர்கள் அடியிற்கண்ட பாடலைச் சொன்னார்கள்.

மருதூர் வா ழாதித்த வள்ளலின் மீது
திருவார் கவியதனைச் செப்பி—வருமுமக்கு
வைத்துடுத்தும் வஸ்திரமும் மற்றுளவாம் நற்பொருளும்
கைத்தலத்தி லீந்திடுவார் காண்.

ஆக்கியோன்.

# சாற்றுக்கவி.

## இராமநாதபுரம் சமஸ்தான வித்வான் பெருநாழி பிளச்சிப்புலவர் மரபு இராமயணப் பிரசங்கம் வெள்ளையப் புலவரவர்கள் குமாரர் கந்தசாமிப் புலவர் பாடியது.

ஆரலைவாய் வயாமுதிர்ந்த கவுரக் கம்புள்
அரும்புளினத் திடை யொதுங்கி யணிமுத்தீனும்

சீரலைவாய்ப் பிரானிருதாள் போற்றப்பாற்றுஞ்
செழுங்காயா மொழிக்கிறையா தித்தன் மீது

நேர்*ரலைவாய்ச் சாறெனப் பாவலர் கேட்டுண்ண
நிகழ்த்தினன் காண் திருமுக விலாசப்பாவின்

காரலைவாய்ப் பொழில் தடவும் பழசை மூதூர்க்
கம்பனெனப்பான் குமரையனா டன்றுன் மன்னே.

* ஆலைவாய்-அலைவாயெனக் குறுக்கப்பட்டிருக்கின்றது.

---

## விருதுநகர் ஸ்ரீமான் இராயலிங்கக் குருக்களவர்கள் இயற்றியது.

மன்னர்குலக் கொழுந்தான வாதித்த மகராச வள்ளலானோன்
செங்நெல் விளைந்திடுகாயா மொழிநகரான் மீதுதிருமுக விலாசம்
சொன்னயமும் பொருணயமுஞ் சதித்தோங்கக் கலிவெண்பா
[துலங்கச்சொன்னான்
பன்னலமுஞ் செறிபழசைக்கு மரயமாலென்றுரைக்கும் பாவலனே.

---

## விருதுநகர் உண்மை விளக்கம் பிரஸ் மானேஜரா யிருந்துவந்த ப. சந்தன மாரியப்ப ஆச்சாரியரவர்கள் இயற்றியது.

அருந்திறல் நிதிக ளோங்கும் ஆதித்த நாடன் காணும்
திருந்தலைச் செந்தூர்க் கந்தன் திருமுக விலாச செல்வம்
பொருந்திய பழசையூரான்—புலவர்கள் மெச்சு சீரான்
இருந்தமிழாளி யெங்கள் குமரயனிசைத்தான் மாதே.

## ஸ்ரீ வில்லிபுத்தூர் யமகக்கவிச் சரபம் ச. அப்பாத்துரைக் கவிராயரவர்களியற்றிய

நேரிசை ஆசிரியப்பா.

மன்னம் பிறங்கு மடைசூழ் மருவெலாம்
அன்னம் பிறங்கு மணிபாண்டி நாட்டினில்
தாயா மொழியாந் தண்டமிழ் தழுவும்
காயா மொழியாய்க் கழறு நன்னகரினில்
மலைத்தவர்க்கரனடி மறவானெதிர்த்து
மலைத்தவர் தம்மொடு மறம் புரியாதோன்
படைக்கலம் பயிலும் பார்த்திப ரேறு
அடைக்கலம் புகுவரை யாதரித்தருள்வோன்
முக்கியசெந்தூர் முதுநகர் மன்னும்
எக்கியக் கந்த னிசைக் கோவிலுக்குச்
சீர்த்திருவிழாவொடு தெருத்தேரோட்டமும்
பூர்த்தியாய் நடத்தும் புண்ணியவாளன்
ஆதித் தமிழ்வலா ரனைவரும் புகழும்
ஆதித்த நாடனு மவன் புகழ் விளங்க
பொன்னியல் பாகப் பொருந்திய வாழ்க்கை
மன்னிய பழசை மாநகர் வாழ்வோன்
சமரையா சிக்குந் தராதிபர் மெச்சும்
குமரைய நாடனுங் கூர்மதியாளன்
பொற்பனைக்காவியப் புலவரும் புகழ்
கற்பனைக் காவியக் கவிநல மிலங்கக்
கலிவெண்பாவைக் காட்டிய காப்பு
மலிவெண்பாவை மனமகிழ்கூர
வித்தகத் திருமுக விலாசநூல்
சித்தகத் திசையச் செப்பினன்மாதோ.

உ

சிவசண்முகன் துணை.

காயாமொழி

# ஆதித்தன் திருமுக விலாசம்

காப்பு.

சீரார்கா யாமொழிவாழ் செவ்வேற்கை யாதித்தன்
பேரார் திருமுகப்பா பேசுவேன்—சூரைப்
பொருவான் வருவதன்முன் பூரணனைச் சுற்றி
வருவா னடியுளத்தில் வைத்து

நூல்.

சீராரு வானத் திகாந்தப் பெருவெளியிற்
பாரதி யென்னில் பலகோடி நேராய்

அமைத்துவிளை யாடிவரு மற்புதமா யாங்கு
சமைத்துயிரைக் காக்குமருள் தானாய்த் தமைத்தாம்

கண்டவர்கள் கண்டடையுங் காட்சியாய்ச் சித்தினிலே
கொண்டவர்கள் கொண்டடையுங் கோலமாய்த் தொண்டரெனும்

வண்டு கொளத் தேங்கருணை மாமதுச்செந் தாமரையாய்ப்
பண்டு மறைகாணாப் பரஞ்சுடராய்க் கண்டபடி

தானே யுரைக்குஞ் சமயநெறி யாவினுக்குந்
தானே விளங்குந் தனித்தேவாய் ஞானமயப்

பத்திநெறி நின்றவர்கள் பாவனையிற் றோன்றியருட்
சித்தியெலாந் தந்தருளுந் தெய்வமாய் நித்தியமாம்

தன்செயலைக் காட்டிநிறை தற்பரமே யுன்னிடத்தில்
என்செயலை யானு மியம்புவேன் நின்கருணைத்

பிறப்பாதி கூறல்.

தேட்டிற் சிறந்த செழியரெனும் பாண்டியர் தம்
நாட்டிற் பழசையெனு நன்னகரம் ஈட்டும்

திருநாழி தன்னிற் சிறந்ததென முன்னோர்
பெருநாழி யென்றனர்கள் பெட்பாய் அருமையுள

அந்நகரி லேபிறந்தே னானவய தீராறுள்
சொன்ன கலையறிந்தேன் சூட்சமாய்த் தன்னியல்பாய்ப்

பன்னூல்க ளாய்ந்தேன் பவணந்தி சொல்லியருள்
நன்னூல் பிறதெரிந்தேன் நாட்டமாய்ச் சொன்னிலக்குஞ்

சத்தியவா னெந்தையருந் தாயும் பதிவிரதை
சித்திபெற வேவளர்த்தார் செல்வமாய் இத்திசையில்

ஏற்ற திருமணஞ்செய் தேற்ற தொழில் தம்மியல்புக்
கேற்ற படியர் வினிமைத்தார் சாற்றும்

குலத்தவர்கள் செய்துவந்த கொளல்விற்ற லீதில்
அலைச்சல் மிகவுடைய னானேன் விலைப்பொருளை

நேர்மையின்றி யொன்றிரண்டாய் நீட்டியுரைக் கக்கலையின்
சார்பா மறிவு தடுத்துவிடும் சேர்பொருள்கள்

கொள்ளுவிலை யொன்றிரண்டாய்க் கூறுவோர்க் காதாயம்
உள்ளவிலைக் கேததிக வூதியங்கள் வள்ளமிசைச்

சென்றுகட லிப்பியள்ளிச் சேர்துறைபோய்ப் பார்த்ததிலும்
துன்றுகதிர் முத்தொளியின் தோற்றமில்லை அன்றுதமிழ்ச்

சொற்பயில மாணவர்கள் தொட்டெழுதிப் பாடவகை
கற்பித்தும் நாளைக் கடத்திவந்தேன் விற்பனஞ்சேர்

கல்விமிகு மாண்பதனைக் காட்டிடினு மேற்றமருள
செல்வ மிலையேற் சிறப்படையா நெல்விளைவே

இல்லாத நன்செயிடாகற்றூர் நேசநிதி
யல்லாத வாழ்வில் மதிப்பாமோ நல்ல கவி

யாத்திரை கூறல்.

பாடிப் படித்துநிதி பாங்காகக் கொள்ளமனம்
நாடினே னூற்கள்பல நண்ணினேன் நீடுதிரைத்

தெண்ணீர்க் கடல்கடந்து தேயம் பலதிரிந்தும்
பண்ணீர்மை யானபல பாவிசைத்தும் உண்ணீர்மை

சாண்வயிறு கண்டதலாற் சாருநிதி கண்டதில்லை
மாண்பார் தவநெறியு வாய்க்கவில்லை காண்பதுவாம்

ஆழிதனிற் சென்றங் கமுக்கி முகந்திடினும்
நாழிநே ரன்றிவரா நானுழி பாழிலேன்

என்னுகிறி ரிப்பிறவி பேற்பதையே பெற்குமெனப்
புண்ணியமூ தாட்டியுரை போதனையாம் மண்ணிதிக்காய்

அட்டதிசை யெங்கு மலைந்தாலும் வானூடு
பட்டமென வோடிப பறந்தாலும் இட்டபடி

ஆவதே யுண்மையென வான்றோர் மொழிதெளிந்தே
பாவகையிற் சிற்சிலரைப் பார்த்துளேன் தாவிவந்து

நாவாரப் பாடுகிற நல்லகவி வாணர்களுந்
ஈவாரைக் காண்கிலே னெவ்விடத்தும் மாவேலாம்

பேராளன் றந்த பிரகாச னேந்குநிதிச்
சீராளன் நாடார் சிகாமணியாம், ஏராகும்

நல்லைநகர் தோன்றியொரு நாயகம்போற் பூமிகடல்
எல்லையெனு மந்த்ரநக ரேவளர்வோன் சொல்லவொணு

மாவியற் சண்முகவேல் வள்ளல் நிதிகொடுத்தான்
காவியத்தைப் போன்றகதை கண்டுமே தாவியங்கு

தஞ்சமெனு வந்தவரைத் தாங்கார்கள் மோச வுரை
வஞ்சகர்க்கே செம்பொன் வழங்குவார் மிஞ்சிமிகக்

கம்பா லடிப்பவர்கள் காண்பதல்லாற் காண்பதெவர்
செம்பா லடித்த திருக்காசு வம்பிழுத்துக்

கள்ள வழக்காடுபவர் காண்பதலாற் காண்பதெவர்
வெள்ளித் துணுக்கடித்த வெண்காசு வள்ளமெலன

உலகவியல்பு கூறல்.

ஈந்தா ரிருந்தா ரிருந்துமீ யாதிருந்தே
வீந்தா ரவர்பெயரை விண்டதார் ஆய்ந்துசுயத்

தேயக் கருப்பொருளைத் தேரார்கள் காட்டுகிற
மாயப் பொருளில் மயங்குவார் சேய

அயனாட்டுக் கல்வி யகத்திலுறப் பேசுஞ்
சுயநாட்டுக் கல்விமிகு தூரம் செயும் விகட

நூதனங்கள் காட்டிவரும் நூல்தெரிவ தன்றியே பு
ராதனநூ லுண்மையினை யாய்கிலார் ஓதியநூல்

உண்மைநிலை யொன்றிருக்க வொன்றுரைத்துத் தம்மனம்போல்
வெண்மையாய்க் கேள்வி வினவுவார் நுண்மையதாங்

காரண காரியத்தைக் காட்டுந் தனிப்பிரம
பூரண தத்துவத்தைப் புந்திகொளார் சாரும்

உவமை யுருவகத்தா லுண்மைநிலை தோன்ற
நுவலும் பொருணிலையை நோக்கார் விவரமதைப்

பார்த்துரைக்க மாட்டார் பகருவதுங் கேளார்கள்
வார்த்தை மனம்போல் வழுத்துவார் ஆர்த்து

மிரட்டிவரு மேழையர் சொல் வேறுபட வாங்கே
புரட்டுந் தொழில்வல் புகழாம் அருட்டிறத்தில்

ஈயமன மின்றிநட வாதவொன்றே யேந்தியேநி
யாயசபை நிற்ப தழகாம் சீயசெயல்

நின்று நிதிகொடுத்து நீதியுறு தேழைகளை
வென்று வருதலொரு வீரமாம் புன்றொழிலில்

ஊகஞ் செலுத்தி யொருவன் வருந்தவன்
தோகையினைக் கொள்ளலும் சூரமாம் மாகனலாங்

கற்பினெறி யின்னமிதனக் கண்டறியார் காட்டுநெறி
நிற்பது மாதர்கலை நேர்மையாம் விற்பனத்தை

எண்ணாது தங்குலம்விட் டேற்காதவோர் குலப்பெண்
கண்ணால மாடவர்கள் காணலமாம் மண்புகழும்

நன்னடையை விட்டுமறு நாட்டினரைப் போனடக்கும்
புன்னடையே நாகரிகமாகத் தன்னியல்பு

தேர்ந்துகொளா திப்பொருளாற் சிட்டேறத் தேசசபை
சார்ந்திருப்போர் மன்றிற் றலைவராம் சேர்ந்தவர்க்குள் 50

உட்சினத்தை மூட்டி யுடற்றவிட்டுத் தானிருக்குங்
கட்சித் தலைமையொரு கண்ணியமாம் எச்சநிலை

நிர்வகிக்கா துள்ளவைகள் நீங்கினபோற் றிட்டிவைத்துச்
சர்வவெங்க னென்னவொரு தந்திரமாம் கெர்வமதால்

இல்லா வழக்கால் எடுத்தவை ராக்கியத்தால்
சொல்லாப் புரட்டுருட்டோர் சூட்சமாம் அல்லினால்

கன்றியெது கூறிடினுங் கன்னமேற் காதுபொருள்
நின்றநிலை நிற்றல் நியாயமாம் குன்றிமுனம்

வந்தவரைச் சீறி வளமுளார்க் கன்னமிகத்
தந்திடுதல் பேரன்ன தானமாம் சிந்தை

அடுக்கு மருட் பத்தியினா லாங்கடைவோர் நிற்கத்
தடுக்குமிடந் தெய்வத் தலமாம் குடித்திடுங்கட்

கள்ளர் நாய் வேசை கபடர்புகு மாலயத்துள் •
தெள்ளறிஞ ருங்கடையிற் றீட்டவாம் உள்ளபடி

ஆதிமனுட வமைப்பொன்று மாந்தர்களை
வீதி தடுப்பவர்கள் மேலோராம் ஓதுநிலை

மீறி நிதி மகளிர் வேட்கையுற, வந்தவர்பாற்
சீறி விழுவோர் செக குருவாம் கூறியங்கு

செந்தழல்முன் கொண்டவளைத் தீர்ந்தடியார் யாங்களெனச்
சந்தி திரிபவர்கள் சாமிகளாம் தந்திரத்தில்

பேசுமய மெத்தனைதான் பெற்றாலும் பேசுவது
காசுமய மன்றியொன்றைக் கண்டதில்லை தேசுடைய

இந்நாட்டுச் செல்வமெனு மின்பமது வாசமதார்
புன்னாட்டுத் தும்பி பலவடரும் சொன்னாட்டுஞ்

சாதியாலுள்ள சமயப் பிணக்குகளால்
ஆதிமறை யுண்மையறி யாமையினால் பேதித்த

பண்ணிலையைக் கண்டுவந்தோர் பாதலத்தில் வேருருவத்
தன்னிலையை யூன்றித் தரித்துளார் மன்னாட்சி

ஏர் புரிந்து நின்றா ரெதிர்க்காம லேயெதிர்த்துப்
போர்புரிந்து நின்றார் புவிக்குரியோர் சார்நீதி

ஏந்திச் சமரசமா யிங்கா டிருந்து வரக்
காந்தி யுதயமொன்று கண்டதுண்டு ஈந்தவரும்

அன்னக் கொடையா லருங்கலைநற் றானமதால்
உன்னு வணிகத் துயர்வதனால் இந்நிலத்தில்

மேலாந் திருவிருதை மிக்கோர்க ளாதார வில்
மாலாங் கலைத்திறத்தில் வைகியுளேன் நூலங்கும்

நண்ணுவரை யாதரிக்கும் நாச்சியப்ப நாடனெனுங்
கண்ணியனி னாதரவு கண்டிருந்தேன் நுண்ணிய நூல்

லக்ஷணத்தை நாட்டியல்பை யெண்ணிப் பலவிதமாய்
தெக்ஷணத்துக் கேகமனஞ் சிந்தித்தேன் அக்ஷணமே

வாகான பாற்குடமு மஞ்சளணிப் பூச்சுடனே
தோகையர்கள் வந்தெதிர் தோன்றவே ஓகையுடன்

நல்ல சகுனமென நாடினேன் மந்த்ரநகர்
செல்லுநெறி யூடுசென்று சேர்ந்துளேன் எல்லையிலாச்

## திருமந்திர நகரஞ் செல்லல்.

செல்வ வளத்தாற் றிகழுமந்த மாநகரின்
நல்வளத்தை யாவர்களே நாட்டுவார் தொல்புவியைக்

காத்தாண்ட மன்னர் கருதுபுகழ்ச் சீராளன்
மார்த்தாண்டன் பட்டி வளநகரான் கூர்த்த

அயில்வளர்கைத் தென்னாட் டரசகுலத் துள்ளான்
வயிரவ நாததுரை வள்ளல் செயுந்தரும

சத்திரத்திற் சென்றினிது தங்கி யுணவருந்திச்
சித்திர மாநகரிற் சென்றுளேன் உய்த்த தொழில்

எந்திரத்தை நீரியக்க வீட்டுகனல் கான்றப்புகை
அந்தரக் குழாய்வா யடர்ந்தெழுந்து வந்துநித்தம்

கார்க்கடனீ ரள்ளியெழுங் காரோ டடர்ந்தலைகைப்
போர்க்குமொரு பந்தலினைப் போற்பரவும் நீர்க்குழாய்

வாடியதன் மக்களுக்காய் மாநதியா மன்னையின்பால்
ஒடிவழி கொங்கையின்க ளொக்குமே பாடமிசை

கூடுகுழாய் நீர்பொழியக் கொண்டவனை யேற்பதென
ஆடுவர்ஐம் பானனைய வங்கலார் மாடுதொறும்

பூவாருங் காவிலங்கப் பொற்சிகர மாடநிரை
தேவா லயங்கள் சிறந்திலங்கும் தூவுதிரை

தாப்பிர வர்ணியிடைச் சஞ்சரிக்கு மீனினம்போல்
காம்பனைய தோளியருங் காளையரும் எப்பலுடன்

வந்துலவு வீதி வரிசையுயர் கப்பநிரை
சந்தமுறக் கோர்த்துவைத்த சப்பிகளாம் யந்திரச்சொல்

தானைப்பல் சென்றனைகள் சாற்றிவரப் புள்ளினம்போல்
வானவி மானநிரை வட்டமிட பானிடங்கள்

நாள்கண்ட தூரமொரு நாழிகையிற் கண்டு வருந்
தூள்கண்ட வண்டில்களின் தோற்றமே வாள்கண்ட

கண்ணியர்க ளாடவர்கள் கைப்பொருளிற் றேற்றவரும்
எண்ணுபொரு ளாவணங்க ளேற்றமே நுண்ணூல்

உரைக்கெலா மோர்முடிவங் கோதலாங் கொண்ட
சரக்கெலாஞ் சொல்லச் சமையா, சரக்குநிதி

கையாலே யெண்ணக் கலிக்குமொலி நர்த்தனஞ்செய்
செய்யாள் கனகச் சிலம்பொலியாம் எய்துகலம்.

அங்குதிரு மால்கடைய வன்றுவைத்த மந்தரம்போல்
தங்குதிரை வாரிதியைச் சார்ந்துநின்றேன் வங்கமிசை

உள்ள பொருணிரப்பி யோதமா னேந்தித் தம்
வள்ளங்கள் போன்றவரும் வள்ளங்கள் விள்ளுமபன்

அப்பனிடு முத்தரவா லன்று நளன் செய்ததுபோற்
செப்பனிடும் பாலமதைச் சேர்ந்து நின்றேன் ஒப்பும்

வழிக்கடங்கி நின்றாட்கு மந்திரஞ்சொல் சோதி
மொழிக்கடங்கிற் றென்ன முறையாம் தொழில்புரியுஞ்

சாலையொலி வேகரயில் தந்தவொலி வந்துபொர
வேலையொலிவிட்டதென விள்ளலாம் ஞாலமதில்

நாற்றிசையி லுள்ளபொருள் நாடியிங்கு வந்திறங்கி
யேற்றுகலத் துறையா மிந்நகரின் தோற்றம்

எவருரைக்க வல்லா ரியல்வணிக மோங்கி
நவநிதியாற் செங்கமல நங்கை உவகையருள்

பூத்துக் குடியிருந்த பொன்னகரை யிந்நிலத்தோர்
தூத்துக் குடியெனவே சொல்லுவார் ஏத்துநிதி

வாடா திருக்குமணி மாநகரி னுட்புகுந்தே
நாடார்தம் பேட்டைபதில் நண்ணினேன் கோடாத

நாவுடை யார்கள்சிலர் நண்ணினீர் யாவரெனப்
பாவல னென்று பகர்ந்திட்டேன் ஆவலாய்

யாப்பாடுந் தாரார் மதிப்பாக வென்றனக்குச்
சாப்பாடு தந்தார் தயவாய் வாய்ப்புளசீர்

நண்பார் முகில்சிவநா ராயணப்பேர் நாடனவன்
உண்பா லமுத முதலிவரும் பண்பான்

இருந்தே னவன்பா லெதிர்காலை பன்னம்
அருந்தே னெனைய தருந்திப் பொருந்தா

நடையெடுத்த போரவுணர் நாயகன்மேற் பூகப்
படையெடுத்த சேவலனைப் பார்க்க இடையெடுத்த

## தென்னாடு செல்லல்.

எண்ணத்தாற் றென்றிசையி லேகினே னெம்மருங்கும்
வெண்ணத்தா ராறுகழிவெப்பிடமாம் உண்மைவாணு

அப்பு விளைவா யருஞ்சுவையாய் மன்பதைகொள்
உப்பு விளையும் உவர்க்கழிகள் எப்புறமும்

வெள்ளக் கடலாய் விளங்கவத னூடுபடர்
அள்ளற் படுகைதனி லாக்குவழி தள்ளியங்கு

சென்றுமிளன் கானிற் றெரியும் பேய்த்தேரையன்று
துன்றுபுன லோடையெனச் சூழ்ந்தோடி நின்று

விதிகெட்ட வாங்கில ஓர் வெம்பரியோ டாழ்ந்த
மதிகெட்டா னேடையெனும் வையம் உதித்தவையும்

அஞ்சக் குளிர்பொருநை யாடு மாம்பையர்கள்
மஞ்சட் குளிக்கு பணிககாயல் பஞ்சவராம்

சொற்கையாக் கீர்த்தித் துரைராஜ பாண்டியர்தங்
கொற்கைப் பதிப்பழமை கூர்ந்தியான் தெற்கு

உமுரிக்கா டென்றுரைக்கும் ஊர்புகுந்தேன் உண்டேன்
கமலவயல் வாழவல்லான் கண்டேன் விமலமயச்

சேர்மனரு ளாசல்போல் தெய்வீக மாய்விளங்கும்
ஏர்வளரு மேறல்நகர் சென்றேன் சீபாய்

பொருநைநதி நீராடிப் புண்ணியனைப் போற்றிக்
கருணைமயச் சித்தனைத்துங் கண்டேன் திருவார்

குறப்பூரைக் கண்டுசென்றேன் கூடுநெறி போர்பால்
ஏறப்பூருந் தன்மைபென வெய்தும் உறப்புகைவான்

ஏறமுக வண்டி யிலைவபுதிதா மீர்நிமிடம்
ஆறமுக னேரி யணிநகர்போய்த் தேறமுகம்

ஆயினேன் தென்றிசைப்பே ரார்கலித வழ்ந்துவெளி
மேயதென்றல் வந்துகளை வெப்பகற்ற தூயபணைந

பாதையதிற் சென்றேன பரந்தாமா வெங்களுங்கோர்
தூதாசச் செல்லத் துணிந்தேனக் காதகனபால்

ஐந்தூரைக் கேட்பதற்கங் கானேன் மருசளுறை
செந்தூரைக் கண்டுகொண்டேன் சீரதாய் நந்தூரும்

## திருச்செந்தூர்ச் செல்லுதல்.

வாவிகளோ பூம்பொழிலோ வண்ணமணி மாளிகையோ
காவி விழி யாரிருககுஞ் காட்சியோ தாவி

மருமகன் வந்திருக்கு மாநகரில் மாமி
பெருமையாய் வந்திருக்கப் பெற்றோ-தரும

இடமோ புவியிலுள்ளா ரேற்படுத்தி வைத்த
படமோ பலபொருளின் மாண்போ தொடர்பாகக்

கொண்டு கவினிருக்குங் கோதிற் றிருநகரைக்
கண்டுகடற் றண்கரையில் நின்றியான் அண்டும்

கதிப்பதமே யென்னக் கடப்பனே யென்றுந்
துதிப்பதையும் போலே தொனிக்கும் மதிப்புடைய

பேராழி தோய்ந்தேன் பிறப்பாழி நீக்கவல்லான்
சீராரு மாலயத்துட் சென்றயான் நீரார்

சடையா னளித்த சடாட்சரனை நேமிப்
படையான் புகழும் பரனை அடுபோர்த்

தொழிலானை வள்ளிவிழித் தூயமலர் பூத்த
எழிலானை யன்பி னிருப்பைப் பொழியுமதக்

கானைப் பரப்புங் கடம்பனை யன்பர் துதி
தேனைப் பருகுஞ் செவியானை வானுலகைக்

காக்க வருந் துரையைக் கஞ்சனைப்போ லெவ்வுலகும்
ஆக்கத் துணிந்தருளு மப்பனை நீக்கமற

எங்கு நிறைந்தே யெனக்குங் கவிபுரைக்கப்
பொங்குமருள் வைத்ததனிப் புண்ணியனை மங்களஞ்சேர்

கோலா கலனைக் குமரனைச் சோதிமய
வேலா யுதம்பிடித்த வீரனை மாலாகி

வள்ளியிடஞ் சென்றானை மாதரவே யுண்டானைப்
புள்ளிமயி லூரும் புனிதனை விள்ளுபல

சூரியர்கள் சேர்ந்ததெனத் துய்யமுடிச் சோதிதரும்
ஆரியனை யென்னுடைய ஆண்டவனை சீரியல்பாம்

எண்ணாரக்கண்டோ ரிடர்தீர்க்குஞ் சோதியினைக்
கண்ணாரக் கண்டு கரங்குவித்துப் பண்ணார

அற்புதமே சிற்பரமே யாறுமுக மாதிருதோட்
பொற்புடைய தற்பரமே பூரணமே கற்புடைய

வானாட்டான் மாது மலைநாட்டான் மாதுமிவர்
மோனாட்டம் வைத்திருக்கும் வித்தகமே மீனாட்டம்

பெற்றாள் திருமகனே பெம்மானே யெப்பொழுதும்
வற்றாத நற்கருணை வாரிதியே உற்ற

செயல்தெரி யாதோ திருவுளத்தி லென்மேல்
தயவுவைத்துக் காக்கத் தகாதோ அயர்த்துமே

நீதா னிருந்தாலும் நேயமுடன் காக்குமிரு
தாய்மா ருனக்கெடுத்துச் சாற்றலையோ தூய

திருக்கண்ட கண்ணுக்குத் தீங்குண்டோ வுண்டோ
அருட்கண்ட வென்றனக்கிங் கச்சம் விரிக்குங்

கமலத்தா ளைப்பணிந்தேன் காத்தருள வேணும்
அமலனே யாறுமுகத் தையா நிமலனே

என்றுகண் ணீர்பொழிய வெம்பெருமான் சந்நிதியில்
நின்று துதிக ணிகழ்த்தினேன் அன்று

விரிக்கிறார் சிற்சிலர்கள் வேதாந்தம் ஐயன்
சிரிக்கிறா ரென்றுதியைத் தேர்ந்து உருக்கமுடன்

நற்கவிகள் பாடிவரு நாவலவ தானடையும்
ஒற்கமதைத் தீர்த்தியென வோதுகிறாய் நிற்கியான்

வந்த பிணியகற்றி மக்களுடன் வாணாளும்
தந்துளே னின்னுந் தரவல்லேன் உந்துநிதி

தாவென்று வைக்கிருந்து தந்திடுவே னென்செயலை
ஆலவாய் நின்பா லறைதவன்கேள் பூவாரும்

நாணற் பெரும்புதர்கள் நாற்றிசையுஞ் சூழநதிக்
கேணியுண் டன்னதுவைக் கேட்டிருப்பாய் பேணலின்றித்

தண்ணீ ரதிற்கிடந்தேன் தாய்தந்தை போறியேன்
உண்ணீரை யன்றியுண வொன்றுமில்லை நண்ணியசீர்

ஆறுமட மங்கையர்கண் டன்பா யெடுத்தணைத்தே
யூறுமுலைப் பாலகனை யூட்டிவளர்த் தாறுதலை

யாயிருக்கச் செய்தா ரவராலோர் பேரடைந்தேன்
தாயென் றொருத்தி தனித்துவந்தாள் சேயெனவே

அன்பா யெடுத்தணைத்தே யத்தனிடங் கொண்டுசெல்ல
என்பரவு சூடி யிருப்பானை முன்புகண்டேன்

அச்ச மபயகரத் தாலே யகன்றுவிட
நிச்சய மூல நிலைதெரிந்தேன் அச்செருக்கால்

பஞ்சாங்கஞ் சொல்லுமொரு பார்ப்பானைப் போது
செஞ்சிறையில் வைத்ததுமென் சேய்க்குறும்பாம் மிஞ்சமிர்தைப்

பாற்கடலி லுண்டுவந்தார் பண்ணவர்க ளக்கடலில்
ஏற்காநஞ் சுண்டுவந்தா ரெந்தையவர் ஆர்க்கும்

செற்றவரைக் கண்டாற் சிரிப்பார் கற்களினால்
எற்றியெறிவதெலா மேற்றிடுவார் உற்று

அமையா வவர்செயலை யாருரைப்பார் பித்தன்
தமையன் செயலுரைப்பேன் சற்று சமைத்து

வைத்ததெலா முண்ணும் வயிறுளன் யானைமுகன்
சத்தியுள வூர்திபெருச் சாளியாம் கைத்தலத்தை

ஆட்டுவா னெண்ணு ரகங்காணு னென்னலனை
ஓட்டுவான் கொம்பை யொடித்தெறிவான் ஊட்டுவிக்கும்

பந்தியினில் முன்னையில்வான் பாவையர்நீர் கொண்டு செல்லும்
சந்தியினில் வீற்றிருப்பான் தப்பாது தந்தவுமை

ஏற்கா திருந்துவிட்டா னென்தாய் மனமிடைந்தே
நோற்காத் தவத்தில் நுழைந்துவிட்டாள் பாற்கடலிற்

சென்றுனோர் பாப்பிற் றிருவனந்தல் செய்திருந்தான்
அன்றுநான் காத்திருந்தே னாகவில்லை என்றன்றுப்

மாமன் செய்தீதுவா மற்றுதுணை யாமெனக்குக்
காமனு மைத்துனனைக் கண்டதில்லை மாமயில்போற்

கன்னியைத் தேடிக் கல்யாணஞ் செய்துவைப்போர்
இந்நிலத்தி லில்லா திருந்ததினால் தன்னியல்பாய்

வானாடு காத்தோன் மகளைத்தந் தானொருவன்
மீனாடுங் கன்னிகுற மின்னையும் மானக்

குலங்கேட்டாற் பெண்ணைக் கொடார்களென வன்னாள்
நலங்கேட்டுங் கொண்டியாய் நண்ணித் தலத்தில்

கடத்திவந்தே னிந்தக் கடற்கரையில் வாழ்வு
நடத்தி யிருக்கிறே னானும் திடக்கவிதை

நாட்டுவோ யென்றுரைக்க நல்லதையா சாலமெல்லாங்
காட்டுவா யுன்னியல்பு காண்பதார் நாட்டில்

உரியவீட் டுக்கார ருப்பரினும் பார்க்கப்
பெரியவீட் டுக்காரன் பிள்ளை பரிவாய்

தனுக்கோடி யம்பொன் சதகோடி வைத்து
மனுக்கோடி காணுமக ராசன் பணியார்

மலையரசன் றன்மகளாய் வந்தவுன் மாதர்
நிலையன்ன பூரணியாய் நின்றாள் உலகிலவள்

சீதனமாய்க் கொண்டுவந்தாள் செம்பொன்மலை வெள்ளிமலை
ஆதீன மாக வமர்ந்தமலை மாதங்கப்

பேராள னண்ணன் பிடித்தவெழுத் தாணிதந்தம்,
ஏரார்பொன் னேடவனன் றேந்தியதாம். பாரார்

விருப்பாற் படியளப்பான் மிக்கவுன் மாமன்
திருப்பாற் கடலுடைய செல்வன். பொருப்பெல்லாம்

சென்றுவிளை யாடிவருஞ் செல்வனீ யில்லைபொரு
ளொன்று லதுவுலகுக் கேற்குமா துன்றுகிதி

நல்குதி நீயெனக்கு நாயகா வென்றுரைக்கும்
எல்லையி லங்கொருவ னெய்தினன் வல்லதிரு

மந்திரஞ்சொன் னவும்அருள் மாறுபடா மேனியுமோ
ரைந்தடக்குஞ் சிந்தையுட னாகியே நந்தாச்

சடாட்சரனே சண்முகனே தக்ககதி மாசு
படாச்சரணே யென்றுதுதி பண்ணிக் கடாட்சமாய்

வந்தான் பணிந்தான் வலாரிக்குத் தன்னுலகந்
தந்தான் கருணை தனையுகந்தான் சிந்தைநிகழ்

ஆனந்தத் தோடிருக்க வந்நாட் குறுமுனிக்கே
ஞானந் தனையளிக்கு நாயகனும் மோனமுனி

செய்யமுக நோக்கியிவை செப்புவா னின்றுதினர்
துய்யகவி பாடிடுமித் தொண்டனுக்கே யெய்துகலி

தீர வழங்குகொடைச் செல்வர்நம் பக்தரிற்கு
பேர னவனிலைமை பேசுவாய் ஈரமிகு

தேன்மன்னு தாரனவன் சீரெல்லா மின்றெடுத்து
நான்சொன்ன தன்மையதாய் நாட்டுகென்று வான்கார்

ஓவிகால னன்றுபட வுற்றுதைத்தோன் றந்த
கலிகால மூர்த்தி கழற நலிவெல்லாம்

தீர்ந்ததென வென்பனத்தே சிந்தித்தேன் தெய்வமுனி
போர்ந்தே யவனி னுளக்குறிப்புச் சேர்ந்தொருபால்

தேன்மீறு பூந்துளபச் சீராமன் றன்கதையை
வான்மீகி கூறிவரு மாட்சிபோல் வான்படருங்

காரெலாந் தோற்குங் கருணையான் கூறுமவன்
சீரெலா மின்றெடுத்துச் செப்புவான் போாத

## ஆதித்தன் பூர்வீகம்.

சோதித் தலப்பெயராஞ் சூரியன்றன் யரபினோர்
ஆதித் தலமா யமர்ந்தவிடம் சீதத்தில்

மாசல நீர்ச்சரயு வண்மை யயோத்திநகர்
கோசலநா டுள்ளதெனக் கூறுவார் தேசுடைய

போரரச ரக்குலத்தார் பொன்னிவள நாடதனிற்
பேரரச ராகிப்பெருகியுளார் சாரசாய்

ஈழனுபர் கொண்ட னிவர்களிந பாற்றணைபாய்ச்
சோழ ரரசு துலக்குமே வேழமிகு

பாண்டியரை வென்று படர்பொருநை நாடுபல
ஆண்டிருந்தார் மூன்று நூற் றாண்டென்பர் ஆண்டிருந்த

தென்னர் பகையுறவாய்த் தென்சோழ பாண்டியப்பேர்
எந்நிலமுஞ் சொல்ல விசைந்துளார் முன்னவனுஞ்

சான்றோன் மரபதனாற் சான்றோர்க ளாதிக்கன்
ஆன்றகுடிப் பெயராய் விளங்கித்தோன் றந்தொன்மை

ஆதித்த நல்லூ ரமரிடமாய்ப் பாண்டியராய்
நீதித்தலைமை நிலைநின்றார் எதிரர்போர்

சாதித்த வீரரவர் தம்மரபி லுண்டொருவன்
ஆதித்த நாட னவன் பெயராம் ஓதித்தேர்

## தசாங்கம்.

சொன்மாற நாட்டிற் றுணிந்தெவரும் வாராத
நன்மான வீரவள நாட்டினான் முன்மதியைத்

தீங்கவள மென்றுகரித் திண்கர நீட் டிம்மறுவால்
வாங்கவுய ரும்பொதிய மாமலையான் ஓங்குமகில்

ஆரமணி யாரமணி யாரமணி கொண்டுகடல்
ஆரமணி செய்பொருநை யாற்றினான் வீரநிலை

சாயா மொழிபொறுத்துத் தன்னிகை யன்றிநெஞ்சைக்
காயா மொழியெனுஞ்சொல் காணகரான் தோயமருள்

தாயாங் குளவளத்தாற் றக்கோர்க ளென்று சொன்ன
காயாங் குளப் பெயருங் காணலாம் தேயரணி

ஆர்வேம் பவைவழக்கி லாயினதால் நீத்தணியும்
வார்வெண் டளவமலர் மாலையினான் சாருந்

துகளெழுந்து முகில்படிந்து துளையளைந்து செருமவங்கு
பகைவர் தங்கண் மகுடபந்தி படவிரைந்து நகுகுறங்கார்

நகமழுங்க நடனதந்த நகைவிளங்க வுலாதுலங்க
முகபணிந்த பணிகளணி முதுகிலங்க போர்புரிந்தோர்

ஆயுதம் படாதெழுந்தே யார்சதங்கை யோலிடச் செல்
வாயுகதி கொண்டுவரும் வாம்பரியாள் பாயுமத

ஆறிழியப் பாகற் கடங்கா தடக்கவொணார்
வீறழியத் தோற்றுமொரு வெற்பிதென நூறமரில்

தண்டாலே தாக்கத் தரியலர்க டங்கண்முடி
கொண்ட மணிசிதறக் கோபமெனப் பண்டு

மருதிடந்தா னென்ன வருமொழி காயா
மருதிடந்தான் சுற்றிவலம் வந்து கருமுகிலை

நீட்டுகோத் தாற்பிழிந்து நீரருந்தி வந்துதங்குங்
கோட்டுசெம் பிரமீது குஞ்சரத்தான் நாட்டமுடன்

ஆண்டுகொண்டா ளூர்தி யசுரருட லென்னமுகில்
கீண்டுநிமிர்ந் தாடுசிங்க கேதனத்தான் ஈண்டு

வழங்குகொடை போர்மணத்தின் மாட்சி விளங்க
முழங்குந் தனிமும் முரசான் பழமையதாய்ச்

செப்புதமிழ் நாட்டையன் றித் தீவு தீவாந்தரமாம்
அப்புறமுஞ் சென்றுவரு மாணையினான் வெப்பவுணர்

தம்பதுமமாங் கணிதத் தானைவென்றான சேவடியாஞ்
செம்பதும மேந்துமுயர் சென்னியினான் அம்பரத்தில்

தேய்ந்த கலைகள் திருந்தியிம் மண்டலத்தில்
வாய்ந்த மதிபோல் மலர்முகத்தான் நேர்ந்துயிர்க்கு

விண்ணளி நீரென்ன வியன்குடி தழைத்துவரத்
தண்ணளி வழங்குந் தடங்கணான் நண்ணமரில்

எதிமுனை நின்றுசெய மீந்தநங்கை சுற்றாங்காஞ்
சோதிக் கடகவளைத் தோளினான் மீதிரப்பில்

நிற்பவ ரிலாதுபுவி நிற்பதுகண் டையவந்த
கற்பகமே யென்னுங் காதலத்தான் தற்பகைஞர்

நாளிருக்க வைகியுறை நாட்டிறப்பத் தோன்றுவடி
வாளிருக்கக் கட்டு மருங்கினான் மூளுபகை

ஆண்டொலிக்கக் கண்டொலிக்கு மாண்மைபுனை சீரிசைகள்
பூண்டொலிக்கக் காலிற் புனைகழலான் மூண்டுமுனம்

உத்தரநாட் டார்கள்படை யுற்றுடற்றுங் காலத்தும்
வைத்த நிலவுரிமை மாறாதான் எய்த்துதியர்

தென்பாண்டி நாட்டரசு தீர்நாளு மீடுபட்டு
முன்பாண் டிருந்த முறைதவறான் அன்பினேகள்

## திருச்செந்தூர் முருகப்பெருமானுக்குச் செய்துவந்த திருப்பணித்திறம்.

சீரலை வாயிதனிற் றெய்வீக மாய்விளங்குங்
காரணத்தைப் போற்றிவருங் கண்ணிபவான் நீராரும்

ஆழி சுடந்தே யவுணர்களை வென்றுவந்த
ஆழியாற் சூழியஞ்செய் யூழியனும் வாழியவுன்

பற்றுகந்தே னிவ்வுலகிற் பாயுந் திரைக்கடலேழ்
வற்றினு வற்ரு வளம்பெருகி உற்ற

நிலக்கண் வளர்ந்துவரும் நின்கிளைகள் நின்னை
வலக்கண்போற் பார்த்து வருவேன் உலத்தின்

உரங்கொடுக்குந் தோளனேயென் றம்பர்பிரான் வந்து
வரங்கொடுக்கப் பெற்றதனி மாண்பான் இரங்கி

தருவடையுங் கானினெறி தப்புங்கால் தோற்றும்
ஒருவிடையின் னூரடையும் ஊகன் பெருவிசும்பில்

பச்சைமயி லேறிப் பறந்துதிரி வோனமர
அச்சுரத மங்கை யமைவித்தோன் தெக்ஷணமாம்

பாரலங் காரன் பரமன்மகன் வீற்றிருக்கத்
தேரலங் காரமிகச் செய்துவைப்போன் போரிலங்கும்

இந்திரனா லத்தே ரிருந்தவனை வென்றவனை
சுந்தரத்தேர் வந்திருக்கத் தோற்றுவிப்போன் உந்தும்

திடந்தொட் டமைத்தமணிச் செம்பொற்றே ரோட
வடந்தொட் டிலங்குகர வள்ளல் அடர்ந்துவந்தோர்

காரோட வார்த்து பயம்பிநிரை யாயிழுக்கத்
தேரோடக் காணுந் திருவாளன் பேரான

ஆதித்தே ரோர்கா லருங்கனலா னுண்டுவிடச்
சோதித்தேர் மீளவங்கு தோற்றுவித்தோன் ஓதியுபர்

தெள்ளிருக்கு மண்டபத்துத் தேவு சிவக்கொழுந்தே
உள்ளிருக்கு மண்டபத்தை யுண்டுசெய்தோன் உள்ளுவர்க்குத்

தாயிரக்கங் காட்டுந் தயாள சிவக்கொழுந்துக்
காயிரக்கால் மண்டபமும் மாங்கமைத்தோன் தூயதமிழ்ப்

பாட்டை யுகந்த பரனருட்கண் டோடிடப்பெய்ச்
சாட்டையடி மண்டபமுந் தானமைத்தோன் நாட்டுலகில்

ஆர்க்கும் பெரியதுறை யாறுமுகக் கோலமதாய்ச்
சேர்க்கைமணி மண்டபத்திற் சேர்ந்திருக்கப் போர்க்கலங்கு

ஏழாநாள் மண்டபச்சீ ரேற்றமிகு பூசையெலாம்
தாழாது செய்துவருஞ் சத்தியவான் சூழுமணிச்

சுந்தரத்தூண் மண்டபத்தோர் சூழலிடை யோங்குதண்ணீர்ப்
பந்த லமைத்துவைக்கும் பாக்கியவான் சந்ததமும்

தேமணக்கு மாலையினன் செய்களுக்கங் கேயிரங்கி
ஆமணக்கு னெய்யு மளித்திடுவான் கோமளமாய்

எந்தவுல குங்கமழ வெம்பிரான் சூடுமலர்
நந்தவன நீர்நிலையும் நாட்டுவித்தோன் வந்திருக்கும்

ஆறுபத்து மூன்றுகொண்டர்க் காகியதொண் டர்ச்சனைகள்
மாறுபடா தேநடத்தி வந்திடுவோன் கூறுபுவித்

தெற்கப் பனைப்பணியுஞ் சீராளன் செந்திலிடை
சொர்க்கப பனைநிறுவுஞ் சோதியான் நெற்கழுத்து

ஒட்டகைமேற் பேரியொலி யூழியிடிபோல் முழங்கக்
கொட்டகைகள் தானமைக்குங் கோமானும், துட்டர்களாம்

செல்மடங்க வென்றுவந்தான் செந்தூரிதிற் பெரிய
கல்மடங்கள் கட்டிவைத்தான் காணுதியால் பல்லுயிர்க்கும்

அன்னை வெயிலுகந்தாட் கட்டநாள் மண்டபச்சீர்
துன்னுந் திருப்பணிநற் றொண்டுடையான் நன்னயஞ்சேர்

நம்பரித யத்தமரும் நாயகியாட் கம்பொன் மணிச்
செப்பரி வாகனமுஞ் செய்துவைத்தோன் அம்புவியில்

தெள்ளறிஞர் கொண்டாடத் தெற்கு ரதவீதியமர்
பிள்ளையார் பூசைநிதம் பேணுவோன் அள்ளிநிதி

கோபுரத்தைக் கட்டுபவர் கூறுமொழிக்கங் கிசைந்தே
பாபுரத்துச் செல்வம் வழங்கினோன் சோபனஞ்சேர்

நித்தியகல் யாண நிகழுவிழ வன்றுதினம்
சத்திதிரு மங்கலமே தந்தருள்வோன் இத்தரையில்

எங்கும் புகழ்பரவ வென்றென்றுஞ் சண்முகற்குப்
பொங்குந் திருப்பணிகள் பூரிப்போன் அங்குளகீழ்க்

காணம் வடபத்துக் காணியதில் நாற்பதெனப்
பூணுசங்கி லிக்கணித பூதானம் பேணியங்கு

அந்நாட் கொடுக்க வதன்பயனை மன்னர்தர
எந்நாளுந் தேர்ப்பணிக்கே யீந்திடுவேன் பொன்னுலகோர்

சேனா பதிக்குந் திறலார் தனக்குமொரு
தானா பதியாய்த் தழைத்துள்ளான் ஆனதிருப்

பேராரு ரெங்கமன்னார் பிள்ளைதன் னுத்தரவால்
தேரார் பணிபுரியச் செய்தருள்வோன் பாரார்

உருவெள்ளி நாணையங்க ளோர்நூறோ டெட்டால்
திருவளர்தேர்க் காட்சி சிறக்குங் கருணைபுரி

தெய்வவரு ளேதுணையாய்த் தெக்ஷணத்துக் கோரரசாய்
வையத் தவன்மரபோர் வாழ்ந்திடும் நாள், வையமதில்

## ஆதித்தன் கட்டபொம்மன் போர்.

பாஞ்சால னென்றவொரு பாண்டியன் பூமியதாம்
தேஞ்சாலுஞ் சோலை திகழிடத்தில் நாஞ்சிலமை

கோட்டைகட்டி யோர்குடியாய்க் கோற்கடங்கிப் பின்புசிறு
நாட்டைப் புரக்குமொரு நாயகமாய் நாட்டுதிறல்

எம்மன்னர் தம்மிடத்து மேற்றசம ராசிகட்ட
பொம்மனென வெங்கும் புகழ்படைத்தோன் வெம்மையுடன்

வேலோடு நின்றா னிடுவென்றது போலுங்
கோலோடு நின்றா னிரவெனவே மேலோர்

இசைமொழிக் கிங்கிலக்கா வெவ்விடத்துங் கொள்ளா
திசைகாவ லென்னும்வரித் தேட்டின் நசையதனால்

தென்னாட்டில் வாங்கிவரச் செல்லுவா ராதித்தன்
பொன்னார் திருச்சபையிற் போய்க்கேட்டார் இன்னவரி

ஈயோ மெனமறுக்க வேதுவா ராங்கொருபால்
ஆயோ தனங்கவர்ந்தே யாறுசென்றார் ஏயசெயல்

கேட்டுச் சினந்தே கிரீடியில வாகுமென
நாட்டுபடை வர்க்கமுட னண்ணியே மாட்டைத்

திருப்பி யவர்கள் செயலடங்கத் தாக்கிப்
பொருப்புநிகர் மாளிகையிற் புக்சான் நெருப்பனைய

கண்ணார்கள் சென்றுரைக்கக் கட்டபொம்மன் சேனையெனும்
எண்ணார் கடலுமெழுந்ததே திண்சிலைகால்

கல்லய வுண்டைகணை கையரிவாள் வேலீட்டி
வல்லயக் காரர் வரிசைகளாம் சொல்லில்மிகு

வம்பளக்குந் துட்டர் வலியடக்குங் கைக்கோலார்
கம்பளத் தார்கள் கணப்பெருக்கம் பொம்மதுரை

ஊமைத் துரையுமதி யூகிபொரு மந்திரியும்
வீமனெனுந் திறலார் வெள்ளையனும் நாமப்போர்.

மண்டி யடருநவ வார்குலத்து மன்னர்சிலர்
தண்டிகை வாவுபரி தங்கிவரத் தெண்டிரைசேர்

தெக்கணஞ்செந் தூரடைந்து செய்திவிடக் கேட்டறிந்த
அக்கணமே தானெழுந்தான் ஆதித்தன் உக்கிரங்கள்

எஞ்சாப் பகைஞரெவர்களெதிர்த் தாலும்வலி
அஞ்சாத் திறம்படைத்த ஆதித்தன கஞ்சமலர்க்

குட்டமார்த் தாண்டன் குலப்பகைய லெல்லைதப
விட்டமார்த் தாண்ட மிகுசமர்த்தன் துட்டர்களை

வெட்டுமா றன்குலத்தான் வீராதி வீரர்களைக்
கட்டுமா றன்புவியின் காவலவன் நட்டவயல்

நெற்குவியப் பொங்கி நிறைநீர்ப் பொருணைபடர்
கொற்கைவள நாட்டார் குலப்பனடஞர் மற்குறிக்குங்

கண்டகர்கள் கண்டவழி கால்விசையி லோடவடர்
திண்டோளர் தெக்ஷணத்துத் தீரர்களாம் உண்டுசெயும்

ஏகனைப்போற்று, மிசுலா மதத்திலுளான்
ஆசத் திரட்சி மடும்வலியில் மாகாழ்த்

திரட்டுக்கட் டையாய்ச் சினந்தாரைச் சாய்க்கு
முரட்டுக்கட் டையா முதல்வன் இரட்டுவலி

கூர்வேலர் வாளாளர் கோட்டுசிலை யாளர்களைப்
போர்வீரர் யாரும் புடைநெருங்கக் கார்வறள

வெப்பாக்கி யண்டம் வெடிக்க வதிருமணித்
துப்பாக்கி வீரரணி சூழ்ந்துவா வுப்பெனுமோர்

சொற்கணை கடந்து விறற் றாயரகு ராமன்விடும்
விற்கணை போலோடுபரி மீதபர்ந்தா வெற்பிலுறுங்

காரைச் சிறையிடுவோன் கால்வழிப்பேர் பூணுமிவன்
யாரைச் சிறையிடுதற் கெண்ணியோ போரைக்

கருதி யெழுந்ததுவாய்க் காணுமெனை நின்ற
திருநகர் மாந்தரெலாஞ் செப்ப உருமனைய

கொம்பொலியால் வானங் குலையக் கடலிலெழுங்
கம்பொலியாற் பாரிலுளார் காதடைப்பப் பம்பியெழுங்

கம்பட்ட மேகங் கடலு மொலியடங்கத்
தம்பட்டம் பேரி தவிலொலிக்கத் தும்பட்ட

திக்கு நிறையச் செறிபடையோ டாதித்தன்
புக்கான் புகைஞர் புகுந்தவிடம் தக்க

தலைவாணிச் சாத்தன் தனிக்கோவிற் பக்கம்
கொலைப்போர்க் களமாய்க் குறித்தார் மலைக்கவென்று

பல்லாக்கில் வீற்றிருக்கும் பாஞ்சால வேந்தர்களில்
வல்லானிளையான் வழுத்துவான் ஒல்லையினில்

இச்சமரை யான்முடித்தங் கெய்துவே னென்னவவன்
பச்சிலைக்காச் செந்திற் பதியடைந்தான் அச்சணமே

போரைக் குறித்தபடை பொங்கியெழுந் தார்ப்பொலியாற்
காரை நிகர்த்துக கலந்தனரே பாரதனில்

சித்தா யிரமாய்த் திகழ்செந்தூர் மேற்புறத்திற்
பத்தா யிரமாய்ப் பகருபடை யுத்தம்செயல்

மல்லாரிதாமுழக்க வான்படைஞர் தம்முடலைக்
கல்லாக வெண்ணிக் கலந்தனரே வில்லிலெழும்

கல்லுண்டை யம்பு கவண்கற்றுப் பாக்கியுயிர்
கொல்லுண்டை யேவிக் குறுகினரே மல்லிலெழுந்

தோள்வலியா லூன்றியெதிர் துண்டிரண்ட தாயுருள
வாள்வலியால் வெட்டி மலைந்தனரே ஆள்வலியைக்

கற்றீட்டி நாட்டுபுகழ்க் காளையர்கள் கையிறுகப்
பற்றீட்டி வேலினங்கள் பாய்ந்தனவே கொற்றீட்டி

ஈய்ந்த பலபடையா லீர்தளத்து வீரர்பலர்
மாய்ந்தார் சமர மடங்கவில்லை ஓய்ந்தறியா

முந்நீர்க் கெதிராய் முழக்குபடை மெய்யிலிழி
செந்நீர்ப் பெருக்கிற் சிரமிதப்ப நன்னீர்

மடற்பனைகள் துன்ன மணற்பரப் பெங்கும்
உடற்பிறங்கல் துன்னி யுயரக் கடற்பணிலம்

தந்த தாளநிகர் தந்தநிரை சிந்தியமா
விந்தை நகையின் விதங்காட்ட அந்திதிகழ்

வான்பிறையைப் பற்றரவின் வண்ணமா யற்றகரங்
கூன்கர வாளதனைக் கொண்டிலங்க ஊன்பயிலும்

காலனிகர் வான்படைசெய் கண்டர்கா லீர்த்தசிரு
காலன் கழலொலியைக் கண்டாட மேலெழுபுள்

துண்டத்தா லூன்கவர்ந்து தோயுதிரந் தூற்றிவரல்
கொண்டல்செந் நீர்பொழியுங் கோள்காட்ட மண்டுசபை

பாடுகலை வல்லவனைப் பார்த்தோடும் லோபியென
ஓடுபவர் பின்புதொடர்ந் தோடுவார் தேடுமுயர்

மண்ணாசை பொன்னாசை மாற்றிவரும் யோகியொரு
பெண்ணாசைப் பட்டுழலும் பெற்றிபோல் நண்ணிவெட்டும்

வாளுக்குத் தப்பிவடி வாளிக்குத் தப்பிவளை
ஆளுக்கு ணின்றே யயருவார் மூளுசமர்

அஞ்சிமிகவந்தவரை யஞ்சாதீரென்றெதிர்ந்து
சஞ்சமலர்க் கையமைப்புங் காணலாம் வெஞ்சமரில்

மீறுபுகழ்த் தெக்ஷணத்தார் மேலேறி வெட்டுதலாற்
கூறுகம்ப ளத்தார் கொலையுண்டார் ஏறும்வலி

வன்கம்ப ளப்படையும் வாள்கொண்டு வெட்டுதலால்
தென்புலத்தார் தென்புலத்தைச் சென்றடைந்தார் கன்மலையாம்

வெள்ளையனு மற்பகடை வீரர்களும் நாயக்கத்
துள்ளுபரி வீரர்களுஞ் சூழ்ந்துவரப் புள்ளணுகா

சீமையெல்லாங் கொள்ளைகொள்ளுந் தீரருடன் மட்டடங்கா
ஊமைத்துரையு முருத்து வந்தான சேமமிகு

சுட்டத்து நாடரணி கொற்கைநா டாள்பவர்கள்
வட்டமா னாட்டரசர் மற்றுமுள்ளார் கட்டடங்கா

மால்முரட்டுக் கட்டையுடன் மாத்தாண்டமன்னனொளிர்
வேல்பிடித்துப் பாங்கர் மிடைந்துவரத் தோளுடனே

ஏதித் தடக்கரத்தா னெப்புவியு மெச்சுபுகழ்
ஆதித்த நாட னமர்க்கெழுந்தான் சேதித்த

ஆகம் புரளு மமர்க்களத்தி லஞ்சாக்கை
நாகமென மீதிவரும் நாடாளை மாகமதில்

வட்டமிடப் புள்ளினங்க்ள் வாளேந்துங் கைத்தலத்துக்
கட்டபொம்ம னுக்கிளையான் கண்டிடைந்தே ட்முட்டுமமர்

விட்டுவிரை வெம்பரிமான் மேனகூரஞ் செல்லவுடன் திட்டமுறுங்
பட்டுவரப் பட்டரெதிர்ப் பட்டனரே திட்டடள

காராளர் தம்மரபு காணமசி வாயனெனும்
சீரானும் பட்டருடன் சேர்க்கையாய்ப் போராடும்

எட்டற்கிளையாற் கிளையானே நீயிளைத்தாய்
கட்டாண்மை யாதித்தன் கைபலமே கொட்டமிடும்

ஒன்னார்கட் கஞ்சாதா னுங்களைப்போ லாலயச்சீர்
பன்னாளுஞ் செய்துவைத்த பாக்கியவான் மன்னாகேள்

செவ்வேற் குமரன் திருத்தொண்ட ராகியநீர்
வெவ்வாட் சமரம் விளைப்பதோ ஒவ்வுறவே

உன்றமைய னாடியதென் றோதியா தித்தனிடம்
சென்றுரைக்க வவ்வுரையைச் சிந்தைகொண்டான் நின்ற

இருவீர வேந்தர்களு மெய்தியுற வாடி
மருவார்காச் செந்திலிடை வந்தார் செருவீரன்

கட்டபொம் மேந்திரனுங் கண்டுவுற வாடியங்கே
இட்டம தாக வினிதிருந்தார் தட்டதனில்

ஆலயத்திற் பட்ட ரபிசாதங் கொண்டுவரச்
சிலமுட னருந்திச் செல்வரிவர் கோலமுடன்

வீற்றிருக்குங் காலையினில் வீரசக்க தேவியடி
போற்றுமுடி மன்னன் புகலுவான் ஆற்றலுள

தென்னாட்டு வேந்தே திசைகாவ லென்னுவரி
எந்நாட்டு நல்கவினி தேற்றுளோம் இந்நாட்டும்

நுங்குடிகள் நல்க நுவலுவீ ரென்றுரைக்கச்
சிங்கமெனுந் திறலான் செப்புவான பொங்கிவளர்

பாண்டியர் சீமையெல்லாம் பாளையப் பட்டாசர்
ஆண்டனர்கள் தம்முரிமை யாதிக்கம் பூண்டனர்கள்

அங்கவரில் நீரொவ ராயுளீ ரிந்தவரி
எங்கள்நா டேற்கா தெனவுரைக்க நன்கெனவே

ஆசையின் காவனிதி யாசைதனை நிறுத்திப்
பேசிய மன்னன் பெரிதுறவாய் மூசுவரி

வண்டடையுஞ் சோலைவளந்திகழ்கா யாமொழியூர்
கொண்டடைந்து நாயக்கர் கூட்டமுடன் உண்டிநுகர்

நல்ல விருந்தளித்தே நாளெட்டுச் சென்றதின்பின்
வல்லோ னுவந்தழைக்க மன்னவனும் பல்லக்கு

வாகனத் தேயமர்ந்து மானாட்டு மன்னர்பலர்
சேகரமாகத் திரண்டுவர ஏகவொணாந்

கோட்டை நகரடைந்தே கொற்றமிகு தோழருடன்
நாட்டமா யுண்டிருந்தான் நல்விருந்து நீட்டமதாய்

ஓடுவிளை யாட்டதனில் பூகசது ரங்கமுதல்
ஆடுவிளையாட்டி லணைகடந்தான் கூடிநகர்

பூட்டு முறையினிலே போகாது வாழ்ந்திடுநாள்
நாட்டுக் குரியதிறை நாணயங்கள் கேட்டுவரும்

ஆங்கிலச் கூட்டரசோ டாடும் பெருஞ்சமரில்
தாங்காப் பொருளொழிந்து தாமொழிந்து போங்காலம்

நட்பாமாதித்தனிது நாடேற்காப் போரெனவே
உட்படப் போருக் குடனேகான் நுட்பமதாய்க்

குண்டுசுடு மாங்கிலராற் கோட்டைபிடி பட்டவர்கள்
துண்டுபட வோடிச் சுழலுநாள் அண்டிவந்து

நாள்பதி னைந்திருந்து நாடுகடந் தேகியதாய்க்
கேள்வியென நாடுரைக்கக் கேட்டுரைத்தேன் ஆள்வலியால்

போராடா மன்னன் பொறுத்திருந்த நற்செயலை
யோராது வந்தபடை யுத்யோகர் பாராளும்

இன்னவனும் பொம்மதுரைக் கேற்றதுணை யாகுமென
துன்னுபடை யாயுதந்துப் பாக்கியுடன் நன்னகரம்

வந்தணுகுங் காலை மகம்மதியர் நோன்பெனச் சொல்
அந்தத் தினங்கள்பல் லாயிரமாய் வந்து

இரக்கு மகம்மதிய வேழைகட் காங்கே
தரக்குறையா நெற்பொருள்கள் தானம் பெருக்கமுடன்

ஈந்திருக்கு மச்சமய மேற்றபடை வீராணி
வாய்ந்தமரு தூரை வளைந்திடவும் ஏய்ந்தசெயல்

கண்டு திகைத்திருந்த காவலனைக் கொண்டுசென்று
மண்டு சிறைக்களத்தில் வைத்தனரே அண்டுநதிப்

பாளையங் கோட்டைப் பதியதனில் வைத்தசிறை
நாளைக் கடத்திவரும் நாளையினில் வாளெடுத்தோர்

காவலுட னுறடைந்த காலையினிற் காவியுடை
தூவியவெண் ணீறணியுந் தோற்றமாய் மேவுபல

தேசந் திரிந்தபர தேசிகள்கண் டாதித்தா
வாசவா நிற்கிதுவும் வந்ததுவோ ஆசையெலாந்

தீர வழங்குகொடைச் செல்வமே யென்றுரைக்க
ஆரம் புரளு மணியுயத்தான் நேரிரக்கக்

குண்டலத்தை யீந்த கொடையாளி யென்னவொளி
கண்டிலம்புங் கடுக்கன் கையளித்தான் மண்டலத்தான்

ஈகையைக் கண்டுவந்தங் கேகினன் சூடுமவர்
வாகையான் காதின் மணிக்கடுக்கன் சேகரத்தில்

ஓர்குழையாய் வந்திடக்கண் டோங்குசிறைச் சாலையின்மேற்
பார்வையான் கண்டுசெவி பற்றுபணி தீர்ந்ததென்ன

செப்புவீ ரென்னவவன் சேவகர்க ளாண்டியினுக்
கொப்பி யளித்த வுறுதிசொல் இப்பெருமான்

வள்ளல் நலமுடையான் வாய்மைநம் மாணையினை
யெள்ளளவுந் தப்பா னெனவியந்து உள்ளதுவாம்

நாளளவை யெண்ணான் நணிவிடுக்க நீங்கிவடி
வாளளவுங் கையான் மணிநகர்வாய் கேளளவ

வந்தினிது வாழ்ந்தான் மகராணி தன்குடைக்கீழ்
இந்திரன் போ னன்னிதியா லென்றுயர ம்உந்துமிவன்

சந்ததிகள் தாம்பெருகித் தாரணியி லோங்குபல
சுந்தரவா தித்தர்களாய்த் தோன்றுகிறார் வந்த

## ஆதித்தன் சந்ததிகள்.

புதுமை விளங்கப் புணரிசூழ் சென்னை
சதுர்வேத சித்தாந்த சங்கம் அதுதெரிந்தே

சாரிப் பரியெனுங்கால் தாங்கச்சென் றுங்குதமிழ்
மாரி பொழிபு மழையிவனும் சீரியன்சொல்

அம்மணி யையாச்சாமி யம்மெனு நூற் காப்புகவி
செம்மை யுரைதெரியச் செப்பினன் விம்மிதஞ்சேர்

சங்கம்வைத்த செந்தமிழான் சார்பொன்னுச் சாமிதச
அங்கம்வைத் துப்பாட அகமழிந்தான் சிங்கநிகர்.

இன்னவனுமோர் தலைவ னின்னுமிவ ரிப்புவியாள்
மன்னவர்கள் மெச்சுதுரை வள்ளல்களாம் உன்னிதமாய்ச்

செய்த்தழை நெல்வேலிச் செந்தூ ரிதிற்பெரிது
வைத்த சபையின் வளம்பெருக மெய்த்தகலை

வல்லோராம் நாடார்கள் வாஞ்சையுடன் சென்றிருக்க
எல்லாநலமு மினிதமைப்போர் சொல்லிவரும்

ஆங்கில பாஷை யதிற்றேறிப் பல்லிடம்போய்ப்
பாங்கா யுயர்தொழில்செய் பண்பினோர் ஓங்குமிந்த

தாலுகாச் செஞ்சபையிற் சார்ந்துநில வட்டமதில்
நாலுசீர் பார்த்துவரும் நன்மையோர் மேலிலங்கும்

இங்கிலாந்து தேயம்வரை யெய்திக்கலை பயின்றும்
துங்கவுத் யோகத் துறையமர்வோர் எங்கும்

சுழன்றுமேற் பின்ன துலகென்று தூயார்
கழறு நிலவுரிமை காப்பார் தெளிவாய்ப்

காயாமொழி செல்லுதல்.

பாடுகவி நாவலவ பைம்பொழிற்கா யாமொழியை
நாடுவாய் வேண்டுநிதி நல்குவார் நீடியவிச்

செந்தூர்க் குமரன்றிருவுளப் பாங்கிதென
அந்த முனிவ னருளினனே முந்துமருள்

தேட்டை விரும்புமுனி சேவடியைப் போற்றியென்றன்
பாட்டை யெல்லாங் கூட்டியொரு பாட்டாக்கி நாட்டமுடன்

சண்முக நாதனருட் சந்நிதியிற் போய்வணங்கி
கண்பார் கருணைக் கடலாடிப் பெண்மயலில்

தோயா மொழியார் துணியுநெறி நாடுதல்போல்
காயா மொழிநகரைக் காதலித்தேன் ஆய

திருவளத்தா ரன்னார் திருமடத்தில் வைகி,
கருங்கடலிற் கண்டேன் கதிரை இருளொழிக்கும்

ஆதித்தன் தோற்ற மடைஎன் கலியகற்றும்
ஆதித்தன் தோற்றத் தறிகுறியாம் நாசித்த

கம்பார் பொருநைநதிக் கால்கடந்தவ் வூர்கடந்து
செய்பார் வழியாகச் சென்றுளேன் தம்பாலில்

எல்லா யிரக்கதிரா லெய்த்தோர் விடாயகற்றும்
பல்லா யிரமாம் பனைஞ்சோலை அல்லாகக்

காணினத் தாருகனசெறிவோர் டேடளவித்
தூணினங்கள் போன்றுநெறி தோன்றுமே பாணி

மடல்தரும் பெண்ணை மணற்பிறங்கல் நிற்றல்
கடல்தா வனுமனுருக் காட்டும் ஓடைவேலின்

வள்ளிபடர் பந்தரின்கீழ் மான்கன்று மான்கன்றுந்
துள்ளிவிளை யாடிச் சுழலுமே எள்ளில்பல

மாஞ்சாலை யூடு மயிலாடு மந்தியினந்
தேஞ்சால் கனிக்கொம்பர் சென்றாடும் பாஞ்சவைகள்

ஆங்கெறியுந் தேங்கிளநீ ரந்தரஞ்செல் கார்படிய
தேங்கு புனற்றுளிகள் சிந்துமே ஓங்குமிசைப்

பாவைக் குமரன்மிசை பாடுவார் கேட்டுருகிப்
பூவைக்கங் கோதும் புனக்கிளிகள் காவுகளில்

மேவுமிளங் கன்னியர்கள் மென்மிழலைச் சொற்களினாற்
கூவுங் குயிலுங் குரலொடுங்கும் வாவியிடை

பங்கயத் தேனருந்திப் பாடுங் களிவண்டு
மங்கல கீதம் வகுக்கும் அங்கனங்கள்

மீதிறங்க லாதித்தர் மென்கீதங் கேட்டெறிசு
வேதத் துகிலின் விதங்காட்டும் சீதவலை

மிக்க கடலிடத்தில் மேவும்வெண் மேகமெனக்
கொக்குத்திரள்கள் குலாவிவரும் புக்கிவரால்

பாயமடிசுரந்து பால்பாயக் கன்றையுன்னி
வாயிற்புல் வைத்து வருமேதி தோய்மடவார்

கண்ணிமலை நாரை கயலென்ற ளாவவங்கே
யுண்ணீர்த் தவளை யொலிபரப்பும் மண்ணில்வரு

வானரம்பை மாதர் மணியாகம் வேரகற்றும்
வானரம்பை வீசு மடலிலையால் தேனெனுஞ்சொல்

அன்னங்கள் வந்துலவ வன்னங்கள் கண்டுநடை
பின்னங்க ளாகுமெனப் பேர்ந்தொதுங்கும் இங்கிலையாந்

தாயா மொழித்தமிழின் சாரங்கள் கண்டறியுங்
காயா மொழிநகரைக் கண்டுசென்றேன் தூயபரா

சத்தியபி ராமி தயாபரி காளிவர
சித்தியெலா நல்குபர தேவதையாம் முத்தலைசேர்

சூலங் கபாலந் துடியேந்தித் தெக்ஷணத்திற்
பாலகரைக் காத்துவரும் பார்வதியாம் சீலமிகு

வெள்ளையம்மாள் நாடாச்சி மெய்ப்பத்தி யாலமைத்த
வுள்ளியழிவண் கோவி லுறையரசி உள்ளும்

உளத்தி லுதித்தெழுந்தே யூறுநீர்க் காயாங்
குளத்துக் கரைவளர்பைங் கொம்பு களத்தரண

வீரிதிற லாதித்தர் வேல்முனையில் நிற்குமுப்பு
ராரி யவனடியை யான்வணங்கிச் சேரத்

தருங்கார்த்தி கேயனணி சண்முகவி லாசம்
பொருங் காத்திரண்டுப்பொன் மாடம் பெரும்பணியை

அள்ளி வெஃகி யானதெனு மம்மொழிக்கே நாணியங்கு
வெள்ளிவரை சுயமாய் மின்னுதல் போல் எள்ளில் பல

மாடம் விளங்கமட மாதர் சிலம்பொலிக்கக்
கூடம் விளங்கக் கொடியாட நீடும்

அரசான தொன்மை யவர்முறையா மந்தப்
புரமாதர் வீற்றிருக்கும் பொற்பு நிரைநிரையாய்த்

தோரண வீதி துலங்கு முயர்நிலையாங்
காரணங் காட்டுங் கலாசாலை சீரிணங்கக்

கற்றுவரு மாணவர்கள் கற்பகச் சோலையிடை
சுற்றிவிளை யாடிவருந் தோற்றமாம் உற்றுமிக

நாடகலை கற்கும் நளினமுகக் கன்னியர்நம்
பாடலினைக் கேட்டுருகும் பைங்கிளிகள் மாடெலாந்

தோன்றுஞ் சிலம்பத் தொழிற்சாலை யெப்பொருளும்
ஊன்று வணிகத் துயரிடங்கள் வான்றிரிவோர்

பொங்கோதை கேட்டுலகம் போகாது நின்றுவிடச்
சங்கிதம்பாடுந் தனிச்சாலை அங்கிதம்

கூடுவர்பா லேற்றுவைத்த கூண்டுகளில் யந்திரங்கள்
பாடுவதைக் கேட்டிருப்பார் பைந்தொடியார் நாடுமிந்தச்

சீரதுவே யெங்குஞ் செறிந்ததால் முன்பு வந்த
நாரதனைக் காணவில்லை நானிலத்தில் பேராளன்

குன்றுநிகர் மாடமிசைக் கோதையுரு வாடியிடை
நின்றிலங்குக்கண்டே நெடிதழைக்கத் தன்றுணைவன்

ஆயநிலை கண்டுநகைத் தங்ககன்றான் போமுருவை
மாயப் பெண்ணென்று மதிமயங்க சேயவெலாம்

பார்த்ததுரைக்கும் பாசுரங்கள் பஞ்சகண்ட மொன்று பாடக்
கோர்த்ததுவைத்த சொற்கப்பி கூடிடங்கள் சீர்த்தபல

கற்பகச்சோலை கனகமலர்ச் சோலைநடு
அற்புத மண்டபங்க ளாதிகண்டேன் அற்புதமாய்

ஈபங்கயக்காத்தா ரிகைபைப் போலூறு புனற்
கூபநீர் பொங்குங் குளிர்சோலை தாபகமாந்

தெற்கு வ்டக்காய்த் திருத்து மாண்மனைகள்
நெற்குலவும் பண்ணை நிலப்பெயராம் எற்குலவும்

ஆகண்டலன் வருண ஞன திசைப்பெயராய்ப்
பாகம் பலபலவாய்ப் பல்கியே சேகரத்தில்

மேலான வந்நகரின் மேற்றிசையி லேவிளங்குஞ்
சீல விநாயகரைத் தெண்டனிட்டேன் மாலான

நீதக் கலைமணக்கும் நேரும்புராணகதை
வேதத்தமிழ் மணக்கும் வேத்தவையாம் சீத

மதுமலரைத் தேடியொரு வண்டடைந்ததென்னச்
சதுர்க்கை தவமதனைச் சார்ந்தேன் புதுமைபல

ஏற்றிருக்கு மாதித்த ரெம்மருங்குஞ் சோதிதர
வீற்றிருக்கக் கண்டு மிகமகிழ்ந்தேன் சாற்றிநிதம்

காணு னலத்தெளிவுங் காந்துமணிப் பூண்களுடன்
பூணு விலங்குதிருப் பொன்மார்பு காணி

நிலைப்பான வாசனத்தில் நித்திலப்பொற்கோவைத்
தலைப்பா விளங்கவெழில் தங்க கலைப்போர்வை

அங்கி யிலங்கமல ராபம் புரளமலர்ச்
செங்கை விரல்மோ திரமின்ன பங்கயமாம்

சேயமுகமிலங்கச் சிந்தூரப் பொட்டிலங்க
தூயகலை பாசுரம்சொல் சொல்லொலிக்க ஆயமலர்

நன்மணஞ்சேர் பந்தரின்கீழ் நாண்சிலைகள் நீக்கியங்கு
மன்மதர்கள் வீற்றிருந்த மாட்சியாய் இன்பமுள

சொல்லாடி முன்னவர்கள் தோற்றமதைக் காட்டியங்கே
உல்லாசமாயிருக்கு முத்தமரை நல்லவையிற்

கண்டேனு வந்தேன் கனியுமுபசாரமெல்லாங்
கொண்டேன் தகுந்தவிசிற் கூர்ந்திருந்தேன் கண்டுதொழுந்

தேவாதிதேவன் திருமுகமாஞ் செம்பொருள்சேர்
பாவான காவியத்தைப் பாடினேன் பூவாரும்

சீர்த்திகழ் முன்னோர் திறங்களெனு முத்தினங்கள்
கோர்த்துவைத்த மாலையெனக் கொண்டனர்கள் பூர்த்தியதாய்ச்
செங்கனகந் தந்தார் செழுமணிப்பொன் னுடைதந்தார்
தங்கள் மனப்போற்றருங்கொடையாம் அங்கவைகள்
பெற்றேன் மகிழ்ந்தேன் பெருநாழி யூர்புகுந்தேன்
உற்ற வறுமை தவிர்ந்தோங்கினேன் முற்றுலகம்
எங்கு நிறைந்தே யெனதிதையவாலயத்தும்
தங்கிவிளை யாடிவருந் தற்பரமே இங்கெடுத்துச்
சாற்றினேன் செந்தூர்ச் சடாட்சரமா மெய்ப்பொருளைப்
போற்று மகத்துவங்கள் பூரணமே ஏற்றமருள்
சண்முகநாதனவன் றண்கருணை வாழிமிகு
வண்மைபுனை யாதித்தர் வாழியே மண்புரக்கும்
கோவாழியிங்கே குமாரயனுன் பாடிவைத்த
பாவாழி மேன்மை படைத்து.

---

## அரும்பத உரை.

79. ஐம்பால் = கூந்தல். 82. கந்தம் = காந்தம் குறுக்கல். 89. வள்ளம் = வட்டில். 99. மா = வண்டு. 167. தனு = உடல். 231. தெள் இருக்கு = தெளிவான இருக்கு வேத. 283. தும்பு = தூசு. 282. கம்பு = சங்கு 283. கம் = வானம். 299. சிரு காலன் = நரி. 328. ஆசை = திசை. 380. பாஞ்சவை = பாய்ந் தவை மருஉ. 385. சுவேதம் = வெண்மை.

196 (ஓங்கும்-அகில்) ஓங்கிவளர்ந்த-அகில்மரம் (ஆரம்) சந்தன மரம் (அணி-ஆரம்) அழகிய ஆத்திமரம் (அணி-ஆரம்) அணியும்படி யான முத்துக்கள் அதாவது, மலையிலுள்ள யானை, பன்றிகளின் கொம்புகளிலுள்ள முத்துக்கள் (மணி) மற்று ரத்தினங்கள் ஆகிய இவற்றைக்கொண்டு (கடல்) கடலிடமாயுள்ள (அம்) நீரில் (அணி செய்) அணி அணியாய் அல்லது வரிசை வரிசையாய் மிதக்கும்படி செய்யப்பட்ட (பொருநை யாற்றினன் தாம்பிரவர்ணியாற்றை யுடையவன்.

## பிழை திருத்தம்.

17. இப்பி, 62. பலவருடம், 229. உபயகம்பி நிரையாய், 313. புள்ளினம், 314. மேனகாம், திட்டமுள, 327. நீரொருவர்.

---

ஈஸ்வர வருஷம் ஆடி மாதம்.

1937 வருஷம் ஜூலை மாதம்.

சுபம்.

PRINTED AT THE MAGAZINE PRESS, CHINGLEPUT.